[2015 பிப்ரவரி 20

45—

தரம் உயர்த்துதல்

***35748—திரு. கு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி எனது பதிலை அளிக்கிறேன்.*

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த வேண்டும் என்ற நியதியில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே ஆக்கூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்ற காரணத்தால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சங்கரன்பந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. கு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வளர்ச்சிக்கும், தமிழர்களின் முயற்சிக்கும், இரவு-பகல் பாராது, இமைப் பொழுதும் சோராமல், தன் நலத்தைத் தள்ளிவைத்து, தமிழர்களின் நலனை இதயத்தில் வைத்து, மக்கள் பணியைச் செய்து மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வரே! எங்கள் மகத்தான தலைவியே! எத்தனை*

2015 பிப்ரவரி 20]

தடைகள் எதிர்கொண்டு வந்தாலும் அத்தனையையும் துணிவுடனே அதிரடியாய் வெற்றி கண்டு முத்திரை பதிக்கின்ற மக்களின் முதல்வரே! எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியில் சங்கரன்பந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே ஒரு ஆண் மருத்துவரும், ஒரு பெண் மருத்துவரும், ஒரு சித்த மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர். 16 ஊராட்சிகளைச் சார்ந்த சுமார் 43,000 மக்கள் இங்கு வசித்து வருவதோடு, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றும் வருகின்றனர். நாளொன்றுக்கு வெளி நோயாளிகளாக 200 பேர்களும், உள் நோயாளிகளாக 100 பேர்களும் மருத்துவச் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதம் ஒன்றுக்கு 10-க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. சித்த மருத்துவத்தின் மூலமாக 100-க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இங்குள்ள மக்கள் மேல்சிகிச்சை பெற வேண்டுமேயானால், 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மயிலாடுதுறைக்கும் அல்லது 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாவட்ட மருத்துவமனை அமைந்துள்ள நாகப்பட்டினத்துக்கும் செல்ல வேண்டியுள்ளது. மேல் சிகிச்சைக்குச் செல்கின்றபோது உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இப்பகுதியில் உள்ள கிராமப்புற மக்களின் நலனைக் கருதி, 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை, ஏறக்குறைய 57 பெரிய ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த ஆவன செய்வார்களா என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய அனைத்து

மக்களுக்கும் முழுமையான, முறையான மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தில்தான், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற ஓர் அற்புதமான திட்டம் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டமாகும்.

2001 ஆம் ஆண்டு முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோதுதான் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். ஏறத்தாழ 385 ஒன்றியங்களிலே, 368 ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஒன்றியத்திலே ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியின் அருகிலே மயிலாடுதுறைக்குத்தான் மேல் சிகிச்சைக்காக செல்ல வேண்டுமென்று சொல்கிறார். இருந்தாலும், அங்கே அருகிலே பொறையாரில் தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. இந்த 385 ஒன்றியங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் முழுமையாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்னர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற, இதுபோன்ற அதிகமான உள் நோயாளிகளும், புறநோயாளிகளும் வருகின்ற, அதிக பிரசவங்களும் நடைபெறுகின்ற மருத்துவமனைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு, பரிவோடு, கருத்திலேகொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனைப் பழுதுபார்க்க வேண்டுமென்றால் வக்ஃபு வாரியம் தடையாக

2015 பிப்ரவரி 20]

உள்ளது. மக்களின் நலன் காக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கும் இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, வக்ஃபு வாரியத்தின் அனுமதி பெற்று, மருத்துவமனையைப் பழுது நீக்கம் செய்யவும், தரம் உயர்த்தவும் வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கவனத்தில்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-35

2. தகவல் கோரல்

தே.மு.தி.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்வின் காரணமாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுசம்பந்தமான விவரம் ஒன்றை நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர் என்பது பேரவை விதி 2-ன்படி, பேரவை கூட்டப்பட்ட நாளிலிருந்து மேதகு ஆளுநர் அவர்கள்